உ

திருச்சிற்றம்பலம்.

உமாபதிசிவாசாரியசுவாமிகள்

அருளிச்செய்த,

சேக்கிழார் நாயனார் புராணம்.

யாவருக்கும் எளிதில் உபயோகமாகும்பொருட்டு

ஆறுமுகநாவலரவர்கள்

சுத்திபருபமாகச்செய்தது.

சென்னை

வித்தியாநுபாலனயந்திரசாலை.

இராக்ஷச௵ வைகாசி௴.

கணபதி துணை.

பெரியபுராணஞ்செய்தருளிய

சேக்கிழார் நாயனார் சரித்திரம்.

தொண்டைமண்டலத்திலே, குன்றத்தூரிலே, வேளாள வருணத்திலே, சேக்கிழார்மரபிலே, பரமசிவனது திருவருளினாலே, தமிழ்நாட்டில் உள்ளவர்கள் உய்யும்படி, அருண்மொழித்தேவர் பாலறுவாயர் என்னுஞ் சற்புத்திரர் இருவர் சகோதரராய்த் திருவவதாரஞ்செய்தார்கள். அவர்களுள்ளே மூத்தவராகிய அருண்மொழித்தேவர் தாம் உதிக்கப்பெற்ற சேக்கிழார் மரபை விளக்கினமையால், அவருக்குச் சேக்கிழாரென்னும் பெயர் உண்டாயிற்று. அவருடைய கல்வியறிவொழுக்கங்களை அநபாயசோழமகாராஜாவானவர் அறிந்து, அவரைத் தமக்கு முதன்மந்திரியாராக்கி, அவருக்கு உத்தமசோழப்பல்லவரென்னும் பெயரைக் கொடுத்தார். அவர்சோழநாட்டிலுள்ள திருநாகேச்சுரமென்னுஞ் சிவஸ்தலத்தினிடத்தே தமக்கு அன்புமிகுதலால், தம்முடைய குன்றத்தூரிலே ஒரு திருக்கோயில் கட்டுவித்துப் பிரதிட்டை செய்து, அதற்குத் திருநாகேச்சுரமெனப் பெயரிட்டு, அதிலே நித்திய நைமித்திகங்களை வழுவாது நடத்துவித்துக்கொண்டு, அநபாயசோழமகாராஜாவுடைய அரசுரிமைச் செங்கோலை ஒழுங்குபெறச் செலுத்திவந்தார்.

இப்படியொழுகுநாளிலே சைவசமயிகளிற் சிலர், பாற்கடலுட் பிறந்த மீன்கள் அப்பாலை உண்ணாது வேறுபலவற்றை உண்டல் போல, மெய்ந்நூல்களாகிய தங்கள் சைவநூல்களைக் கல்லாது பரசமயங்களுள் ஒன்றாகிய ஆருகதத்தை அநுட்டிக்குஞ் சமணர்களுடைய காப்பியமாகிய சீவகசிந்தாமணியை மெய்யெனக் கருதிக் கற்று, தங்கள் வாணாளை வீணாளாகக் கழிப்பாராயினார்கள். அநபாயசோழமகாராஜாவும் அந்தச் சீவக

சிந்தாமணிக்கதையை மெய்யென்று கருதி மனமகிழ்ந்து, பாராட்டிக் கேட்பாராயினர். அதுகண்ட அருண்மொழித்தேவர் இராஜாவை நோக்கி, "மகாராஜாவே, நீர் சைவசமயியாயிருந்தும், இம்மை மறுமை வீடென்னும் மூன்றும் பயக்குஞ் சத்தியமாகிய சிவசரித்திரத்தைக் கேளாமல், நமது மெய்க்கடவுளாகிய சிவபெருமானை நிந்திக்கும் புறச்சமயிகளாகிய சமணர்களுடைய பொய்க்கதையாகிய இந்தச் சீவகசிந்தாமணியை மெய்யெனக்கருதிப் பாராட்டிக் கேட்டு, உமது வாணுளை வீணுளாகக் கழிப்பது தகுதியன்று. இது அதிபாதகமென்றே நிச்சயித்து அறிந்துகொள்ளும்" என்று கண்டிக்க; இராஜாவானவர் மனமகிழ்ந்து, "இது அவகதைபாய்ப் பயனற்ற கதையாயின், இம்மை மறுமை வீடு மூன்றும் பயக்கத்தக்க சிவசரித்திரம் யாது? அதன் வரலாறு யாது? ஐயந்திரிபறச் சொல்லும்" என்று கேட்டார். அதற்கு அருண்மொழித்தேவர் "திருவாரூரிலே சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய வன்மீகநாதர், தம்முடைய திருத்தொண்டர்களது அடிமைத்திறத்தை ஆன்மாக்கள் உய்யும்படி பாடும் பொருட்டு அநுஞ்ஞைசெய்து, "தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்று அடியெடுத்துக் கொடுக்க; பஞ்சபாசத்தடைநீங்கிய சமயகுரவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திநாயனர் பதினெரு திருப்பாட்டினுலே திருத்தொண்டத்தொகை என்று பெயர் தந்து, ஒரு திருப்பதிகம் பாடியருளினர். அந்தத் திருத்தொண்டத் தொகைக்குத் திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப் பிள்ளையார் பொருள் சொல்ல, பாலியதசையிலேயே வேதசிவாகமாதி சமஸ்தசாத்திரங்களையும் அவரிடத்திலே ஓதியுணர்ந்த ஆதிசைவராகிய நம்பியாண்டார்நம்பியானவர் அதனை வகுத்துக் கட்டளைக் கலித்துறையினுல் ஒரு திருவந்தாதி செய்தருளினர். அதற்கு நம்பியாண்டார்நம்பியந்தாதி என்பது பெயர். அத்திருவந்தாதியைத் திருமுறைகண்டராஜராஜ அபயகுலசேகர சோழமகாராஜா சிவாலயமுனிவர் முதலிய பெரியோர்களெல்லாரும் எடுத்து இனிது பாராட்டினுர்கள்" என்ருர். அது கேட்டு இராஜா "அத்திருவந்தாதியை ஓதிப் பொருள் சொல்லும்" என்று சொல்ல; அருண்மொழித்தேவர் அதனை ஓதி, பொருளை

விரித்து உரைத்தார். இராஜா அதைக்கேட்டு, திருத்தொண்டர்களுடைய அடிமைத்திறத்தையும் அவர்களுக்கு அருளிய பரமசிவனது திருவருட்டிறத்தையும் நினைந்து உருகி, அருண்மொழித்தேவரை நோக்கி, "இந்தச்சரித்திரத்தை யாவருக்கும் தெளிவாய் விளங்கும்பொருட்டு, இலக்கணவிதிப்படி அமைந்த பெருங்காப்பியமாக விரித்துச் செய்துதாரும்" என்றார்.

அருண்மொழித்தேவர் அவ்வரசரிடத்தில் எண்ணிறந்த திரவியங்களையும் விடையையும் பெற்று, சிதம்பரதலத்தை அடைந்து, சிவானந்தவடிவாகிய சிவகங்கையிலே ஸ்நானம் பண்ணி, சந்தியாவந்தனமுஞ் சிவபூசையும் முடித்துக்கொண்டு, கனகசபைக்கு முன்சென்று, பஞ்சகிருத்தியநிருத்தஞ் செய்தருளுஞ் சபாநாயகரைத் தரிசித்து, அழலிடைப்பட்ட வெண்ணெய்போல மனங்கசிந்துருகி, இரண்டுகைகளும் சிரசின்மேல் ஏறிக்குவிய, ஆனந்தவருவி சொரிய, உரோமஞ்சிலிர்ப்ப, கரையற்ற இன்பக்கடலிலே அமிழ்ந்தி நின்று, "எம்பெருமானே, அடியேன் தேவரீருடைய திருத்தொண்டர்களது அடிமைத்திறத்தைப் பெருங்காப்பியமாக விரித்துப் பாடும்பொருட்டுத் தேவரீர் அடியெடுத்துத் தந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்து வணங்கினார். உடனே சபாநாயகரது திருவருளினாலே, "உலகே லாமுணர்ந் தோதற் கரியவன்" என்று ஓரசரீரிவாக்கு எழுந்தது. அதனைத் தில்லைவாழந்தணர்களும் மகேசுரர்களும் கேட்டு, மனமுருகி நமஸ்கரித்து, சபாநாயகருக்குச் சாத்தப்பட்ட திருமாலையையும் திருநீற்றையும் திருப்பரிவட்டத்தையும் அருண்மொழித்தேவருக்குச் சாத்திக் களிகொண்டார்கள். அருண்மொழித்தேவர் சைவத்திருநெறித் தலைவர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாயனார் சுந்தரமூர்த்திநாயனார் என்னும் மூவரையும் நமஸ்கரித்து, விபூதி ருத்திராக்ஷங்களை விதிப்படி தரித்து, ஆயிரக்கால் மண்டபத்திற் சென்று, சபாநாயகரது திருவருளை நினைந்து இருந்துகொண்டு, அவர் எடுத்துத்தந்த திருவாக்கை முதலாகக்கொண்டு, புராணம் பாட ஆரம்பித்து, சிலகாலத்திலே புராணத்தைப் பாடிமுடித்து, அதற்குத் திருத்தொண்டர்புராணமெனப்

பெயர் தந்து, மைக்காப்புச் சாத்தி, கவளிகையில் வைத்தரு ளினர்.

அருண்மொழித்தேவர் புராணம்பாடுதற்குச் சிதம்பரத்தை அடைந்தபின், எத்துணைக்கதைகள் நிறைவேறின இன்னும் எத்துணைக்கதைகள் இருக்கின்றன என்று அறியும் பொருட்டுக் காலந்தோறும் அத்தியந்த ஆசையுடன் தூதர்களை அனுப்பிக்கொண்டிருந்த அநபாயசோழமகாராஜாவானவர் புராணம் முற்றுப்பெற்றமையைச் சிலதூதர் சொல்ல அறிந்து, மனமகிழ்ந்து, அவர்களுக்குக் கனகமாரி பொழிந்து, சபாநாயகரையுஞ் சேக்கிழார்நாயனார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணத்தையும் வணங்க நினைந்து, சுபதினத்திலே சுபமுகூர்த்தத்திலே கச ரத துரக பதாதிகள் சூழ யானைமேற்கொண்டு சென்று, சிதம்பரத்துக்குச் சமீபித்தார். தில்லைவாழந்தணர்களும் மடபதிகளும் அருண்மொழித்தேவரும் மற்றைப்பெரியோர்களும் அரசருடைய வரவை அறிந்து, அவரை எதிர்கொண்டு, ஆசீர்வாதம் பண்ணினர்கள். அரசர் அருண்மொழித்தேவருடைய சிவவேடப்பொலிவைக் கண்டு மனமகிழ்ந்து, தம்மை அறியாது கைகள் சிரசின்மேல் ஏற, சபாநாயகர் அடிமைகொள்ளப்பெற்ற அவரது பெருமையை நினைந்து, அவருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்தார். பின்பு அவ்வருண்மொழித்தேவரோடுந் தில்லைவாழந்தணர்களோடும் மடபதிகளோடும் சென்று, கனகசபையிலே திருநிருத்தஞ்செய்தருளுஞ் சபாநாயகரைத் தரிசித்து, ஆனந்தவருவி சொரிய, இரண்டுகைகளுஞ் சிரசின்மேல் ஏறிக் குவிய, மனங்கசிந்துருக, உரோமஞ்சிலிர்ப்ப, உரை தடுமாற, அன்பினேடு விம்மி விம்மித் தண்டாகாரமாக விழுந்து எழுந்து நின்று, ஸ்தோத்திரம் பண்ணினர். அப்பொழுது "சோழனே, நாம் 'உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்' என்று அடியெடுத்துக் கொடுக்க, சேக்கிழான் நம்முடைய தொண்டர்களது அடிமைத் திறத்தை விரித்துப் புராணம் பாடி முடித்தான். நீ அதைக்கேள்" என்று ஓரசரீரிவாக்கும் திருச்சிலம்பொலியும் கனகசபையிலே சமஸ்தருங்கேட்க எழுந்தன.

அநபாயசோழமகாராஜாவானவர் அதைக்கேட்டு மன மகிழ்ந்து, திருத்தொண்டர்புராணத்தைக் கேட்க வரும்பொருட்டு, எங்குமுள்ள சிவனடியார்கள் சமஸ்தருக்கும் நிருபங்கள் அனுப்பினர். அரசரது ஏவலினால் ஏவலாளர்கள் ஆலயத்தையும் திருவீதிகளையும் மிக அலங்கரித்தார்கள். திருநெறித்தமிழாகிய தேவார திருவாசகங்களிலே வல்ல பெரியோர்களும், சிவாகமவிற்பன்னர்களும், வேதவேதாங்கபண்டிதர்களும், சிவாசாரியர்களும், இலக்கணவிலக்கிய வித்துவான்களும், காவிய விற்பத்திமான்களும், பிறருமாகிய எல்லாரும் நிருபங்கண்டு மனமகிழ்ந்து, விரைந்து புறப்பட்டு, சிதம்பரஸ்தலத்தை அடைந்தார்கள்.

தில்லைவாழந்தணருள் ஒருவர், சித்திரைமாசத்திலே திருவாதிரை நக்ஷத்திரத்திலே சபாநாயகர் சந்நிதானத்திலே மெழுகி, அறுகாற்பீடமிட்டு, அதன்மேற் பசும்பட்டு விரித்து, அதன்மேல் வெள்ளைப்பட்டை மடித்து இட்டு, புஷ்பங்களைத் தூவி, தூபங்கொடுத்து, ஆசனங்கற்பித்து, திருத்தொண்டர் புராணத்திருமுறையை அதன்மேல்வைத்து, அருச்சித்து, வணங்கித் துதித்தார். அதன்பின், சோழராஜா முதலாகிய அடியார்களெல்லாரும் சேக்கிழார்நாயனாரை வணங்கி, "சுவாமீ, இந்தத் திருத்தொண்டர் புராணத்தைத் தேவரீரே வாசித்துப் பொருள் அருளிச்செய்வீர்" என்று விண்ணப்பஞ்செய்ய; அவர் அப்புராணத்தின் பொருளை விளங்க விரித்து அருளிச்செய்ய; எல்லாரும் இருந்து கேட்பாராயினர்கள். சோழமகாராஜாவானவர் அன்றுமுதலாக நாடோறும் சபாநாயகருக்கு மகாபூசை நடத்திவந்தார். தில்லைவாழந்தணர்களுக்கும் மடபதிகளுக்கும் திருத்தொண்டர் புராணங்கேட்க வந்த எண்ணிறந்த அடியார்களுக்கும் போசனமுதலியவைகளெல்லாம் அவ்வரசரது செலவினாலே நடந்தன. எல்லாரும் அத்தியந்த ஆசையோடு கேட்க அருண்மொழித்தேவர் தினந்தோறும் புராணம் வாசித்துப் பொருள் சொல்லி, மற்றவருஷத்திலே சித்திரைமாசத்திலே திருவாதிரை நக்ஷத்திரத்திலே முடித்தருளினர்.

புராணமுற்றுப்பெற்றவுடனே தில்லைவாழந்தணர் திருத்தொண்டர் புராணத்திருமுறையை விதிப்படி அருச்சனை

செய்துவணங்கினர். அநபாயசோழமகாராஜா அந்தத் திருமுறையைப் பசும்பட்டினலே சுற்றி,பொற்கலத்திலே வைத்து, அதனை எடுத்து யானையின் சிரசில் இருத்தி, சேக்கிழார்நாயனரை அவ்யானைமேல் ஏற்றி, தாமுங்கூட ஏறி, இரண்டுகைகளினலும் வெண்சாமரம் வீசுவாராகி, சபாநாயகருடைய திருவருளை நினைந்து, "இதுவன்றே நான் செய்த தவப்பயன்" என்றார். சேக்கிழார்நாயனுர், மங்கலவாத்தியங்கள் ஒலிக்க பிராமணர்கள் வேதகோஷஞ்செய்ய, சிவனடியார்கள் ஹர ஹர என்று சொல்லும் பேரொலி தழைக்க, தில்லைவாழந்தணர்கள் வீதிகடோறுந் தூய்மைசெய்து வாழைகள் நாட்டித் தோரணங்கள் நிரைத்துப் பூமாலைகள் தூக்கிப் பூரண கும்பங்கள் வைத்துப் பொரிதூவித் திருவிளக்கேற்றி, வேதங்களை ஓதி எதிர்கொண்டு அறுகு எடுக்க, அடியார்கள் தம்முடைய சிவவேடப்பொலிவையும் புத்தகக்கவளிகையையும் திருவுளம் அழியுந்தோறும் ஹர ஹர என்று சொல்லுதலையும் தமிழ்நாடு முழுதும் உய்யும்படி அருளிய பெருங்கருணையையும் கண்டு கண்ணீர்சொரிய மனம் நெக்கு நெக்குருக வணங்கித் துதித்து ஆனந்தக்கூத்தாட, திருவீதிவலஞ் செய்து, திருமுன்றிலை அடைந்து, அரசரோடு யானையினின்றும் இறங்கி, கனகசபையிலே சென்று, திருமுறையைத் திருமுன்னே வைத்தார். சோழராஜா அவ்வருண்மொழித்தேவருக்குத் "தோண்டர்சீர் பரவுவார்" என்னுந் திருநாமங்கொடுத்து, ஞானமுடிசூட்டி அவரை மண்டபத்திலே இருத்தி அவருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்தார்.

பின்பு, முற்காலத்திலே இராஜராஜ அபயகுலசேகர சோழமகாராஜா கேட்டுக்கொண்டபடி நம்பியாண்டார்நம்பியால் வகுக்கப்பட்டனவாகிய பதினெரு திருமுறைகளுடனே, அந்தத்திருத்தொண்டர் பெரியபுராணம் ஒன்று கூட்டி, அதனைப் பன்னிரண்டாந்திருமுறையென வகுத்து, அதனைச் செப்பேடு செய்து, சந்நிதியில் ஏற்றுவித்தார்.

அதன்பின் "இந்நாயனருடைய தம்பியாராகிய பாலறுவாயர் இப்பொழுது எங்கே உளர்" என்று வினவ; சமீபத்தில்

நின்றவர்கள் சிலர் வணங்கிக்கொண்டு நின்று, "அவர் குன்றத்தூரிலே ஒருதிருக்குளம் அமைத்தபின், திருநாகேசுரருக்குத் திருப்பணிசெய்துகொண்டு, அவ்விடத்தில் இருக்கின்றனர்" என்ருர்கள். அதுகேட்ட அரசர் அவரை அழைப்பித்து, அவருக்குத் தொண்டைமான் என்னும் பெயர்கொடுத்து, அவரைத் தமக்கு முதன்மந்திரியாராக்கினர். அருண்மொழித் தேவர் சிதம்பரத்திற்ருனே சிலகாலம் எழுந்தருளியிருந்து, பின் அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபியாகிய சபாநாயகருடைய குஞ்சிதபாதநிழலை அடைந்தார்.

சைவசித்தாந்த சாத்திரோபதேசஞ் செய்தருளிய சந்தானுசாரியர்களுள்ளே தலைவராவார் சிவபெருமானது அருள்பெற்ற திருநந்திதேவர்; அவர்மாணக்கர் சனற்குமாரமகாமுனிவர்; அவர் மாணக்கர் சத்தியஞானதரிசனிகள்; அவர்மாணக்கர் பரஞ்சோதி மகாமுனிவர்; அவர் கிருபாவசத்தினலே திருக்கைலாசகிரியினின்று நீங்கித் தமிழ்நாட்டிற்கு எழுந்தருளியபோது அவரிடத்திலே ஞானேபதேசம் பெற்ற மாணக்கர் திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருந்த வேளாளராகிய மெய்கண்டதேவர் என்னுங் காரணப்பெயரையுடைய சுவேதவனப்பெருமாள்; அவர்மாணக்கர் நாற்பத்தொன்பதின்மருள்ளே தலைவர் திருத்துறையூரில் எழுந்தருளியிருந்த ஆதிசைவராகிய சகலாகமபண்டிதர் என்னுங் காரணப்பெயரையுடைய அருணந்திசிவாசாரியர்; அவர் மாணக்கர் திருப்பெண்ணகடத்திலே திருவவதாரஞ்செய்து சிதம்பரத்தைச்சார்ந்த திருக்களாஞ்சேரியில் எழுந்தருளியிருந்த மறைஞானசம்பந்தசிவாசாரியர்; அவர்மாணக்கர் தில்லைவாழந்தணரில் ஒருவராய் அந்தத் திருப்பதியைச் சார்ந்த கொற்றவன்குடியில் எழுந்தருளியிருந்த உமாபதிசிவாசாரியர்; அவர் திருத்தொண்டர்புராணத்தைச் சுருக்கித் திருத்தொண்டர்புராணசாரம் எனப் பெயர்தந்து, எழுபத்தைந்து திருவிருத்தத்தால் அருளிச்செய்து, சேக்கிழார்புராணமும் பாடியருளினர்.

திருச்சிற்றம்பலம்.